# கழக முப்பெரும் விழா... கரூரில் திருவிழா!

## உங்களில் ஒருவன் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

**ஒன்றிய பா.ஜ.க அரசின் வஞ்சகத்தாலும், அதனிடம் அடிமையாக இருக்கின்ற அ.தி.மு.க.வின் துரோகத்தாலும் நாம் இழந்தவற்றை மீட்கும் முயற்சியில் கடந்த நான்காண்டுகளில் பெருமளவு முன்னேறியுள்ளோம். பொருளாதாரத்தில் இரட்டை இலக்கத்திலான வளர்ச்சி, பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்வியில் உயர்ந்த நிலை, மருத்துவத்துறையில் மக்களின் நலன் காக்கும் சிறந்த கட்டமைப்பு, இந்தியாவிலேயே அதிக தொழிற்சாலைகளைக் கொண்ட மாநிலம், அதிகளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்குகிற மாநிலம், பெண்களின் முன்னேற்றத்திற்கும் தற்சார்பு நிலைக்கும் வழிவகுக்கும் மாநிலம் என்று ஒன்றிய அரசின் புள்ளிவிவரங்களே தமிழ்நாட்டின் சாதனைகளை எடுத்துச் சொல்லும் அளவுக்குத் திராவிட மாடல் அரசு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.**

அண்மையில் ஜெர்மனி, இங்கிலாந்து நாடுகளுக்குச் சென்று தமிழ்நாட்டுக்கான தொழில் முதலீடுகளை ஈர்த்த நிலையில், அங்கு வாழும் தமிழர்கள் நம் மாநிலத்தின் நிலை கண்டு பெருமிதம் கொள்வதாகத் தெரிவித்தனர். உலகப்புகழ் பெற்ற ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் சுயமரியாதை இயக்க நூற்றாண்டுக் கருத்தரங்கில் தந்தை பெரியாரின் உருவப்படத்தை அவரது கொள்கை வாரிசாகத் திறந்து வைக்கும் வாய்ப்பு கிடைத்தபோது நம் ஆட்சியின் சாதனைகள் யாவும் பெரியார் - அண்ணா -கலைஞர் ஆகியோரின் வழித்தடத்தில் தொடர்வதை உணர்ந்தேன். திராவிடத்தை உலக நாடுகள் அறிந்துகொண்டு ஆய்வு செய்கின்ற காலத்தில் நாம் இருக்கிறோம்.

**உலகம் போற்றும் திராவிடத்தின் பெருமை தொடர்ந்திட, தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சி நீடித்து நிலைத்திட, ஏழாவது முறையாகக் கழக ஆட்சி மலர்ந்திட கரூரில் நடைபெறும் முப்பெரும் விழா வெற்றிப்பாதையாக அமையட்டும்! கொள்கையில்லாக் கூட்டத்தைச் சேர்த்து, கூக்குரலிட்டு, கும்மாளம் போட்டு, பொதுமக்களுக்கு இடையூறு செய்யும் இயக்கமல்ல தி.மு.கழகம். நாம் கூடும்போது கொள்கைப் பட்டாளமாகக் கூடுவோம்! கூட்டம் முடிந்து இலட்சிய வீரர்களாகப் புறப்படுவோம்!**

பேரறிஞர் பெருந்தகை அண்ணா போதித்த கட்டுப்பாட்டை முத்தமிழறிஞர் கலைஞர் கட்டிக்காத்து, இன்று உங்களில் ஒருவனான என் தலைமையிலும் அதே கட்டுப்பாட்டுடன் கொள்கைக் கூட்டமாக உடன்பிறப்புகள் திரள்வதை கரூரிலும் காண இருக்கிறேன்.

**இலட்சிய வீரர்களாக 2026 தேர்தல் களத்தில் வெற்றி வாகை சூடுவதற்கான முன்னோட்ட அணிவகுப்புதான் இந்த முப்பெரும் விழா.**

இருவண்ணக் கொடியேந்தி கொள்கைக் குடும்பமாக அணிதிரள்வீர்! இலட்சியத்தை நெஞ்சில் ஏந்தி, பாதுகாப்பாகத் திரும்பிச் செல்வீர். பெரியார் - அண்ணா - கலைஞர் புகழ் நிலைக்கட்டும்! கழகத்தின் வெற்றிச் சரித்திரம் தொடரட்டும்!

அன்புடன்,

**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2056
ஆவணி 28
13-09-2025

---

நாளை செப்–15 பேரறிஞர்அண்ணா பிறந்தநாள் அன்று

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் அனைத்து கிளைகளிலும் கழக கொடியேற்றுவோம்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், செப்.14-

கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் அன்புக் கட்டளைக்கிணங்க, நாளை செப்டம்பர்-15 பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் அன்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளைகளிலும்கழக கொடியை ஏற்றி, மாவட்டத்தில்உள்ள 2,404 வாக்குச்சாவடிகளிலும், வாக்குச்சாவடி வாரியாக BLA-2, BDA, BLC ஆகியோர் பங்கேற்கும் வாக்குச்சாவடி கூட்டங்களை நடத்தி, அந்தந்த வாக்குச்சாவடிகளில் "ஓரணியில்தமிழ்நாடு" திட்டத்தின் கீழ் கழகத்தில் உறுப்பினர்களாக இணைந்த குடும்பங்களை அழைத்து, அவர்களையும் பங்கு பெற செய்து. அக்கூட்டங்களில் அனைவரும் இணைந்து உறுதிமொழி ஏற்றிட வேண்டும் என்று காஞ்சி வடக்கு மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சித் தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்களால் 1949-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட "திராவிட முன்னேற்றக் கழகம்" என்ற பேரியக்கம், அண்ணாவின் கொள்கைத் தம்பிகளால் வளர்க்கப்பட்டு அவரது தம்பிகளில் தலையாய தம்பியான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 50 ஆண்டுகளுக்கு மேல் கட்டிக் காக்கப்பட்டு,

நாம் நாளும் உயிராய் போற்றி வணங்கும் நம்முடைய உயிரினும் மேலான அன்புத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் வெற்றிகரமாக இயங்கி கொண்டிருக்கிற வேளையில் இன்றைக்கு தி.மு.கழகம் பவள விழா ஆண்டை நிறைவு செய்து, நூற்றாண்டுவிழாவைநோக்கி வெற்றிகரமாகபீடுநடைபோடுகிறது. ஒரு மாநில கட்சியான தி.மு.கழகம் முக்கால் நூற்றாண்டு காலம், தமிழ் நாட்டு மக்களின் நலன்காக்க உறுதியாக போராடியும்,

இந்தியாவிலேயே முதன் முறையாக ஒரு மாநில கட்சியான தி.மு.க.வால், தமிழ் நாட்டு மக்களின் பேராதரவுடன் வெற்றி பெற்று ஆட்சியை பிடிக்க முடியும் என்ற வரலாற்று சாதனையை நிகழ்த்தியும்,

இந்தியாவுக்கே முன்னோடியான பல திட்டங்களை வகுத்தும், சட்டங்களை உருவாக்கியும், இன்று இந்தியாவை வழிநடத்தக் கூடிய வகையில், தி.மு.கழகம் தனக்கென தனித்துவமான இடத்தைப் பெற்றும் திகழ்கிறது என்றால், அந்த பெருமை எல்லாம் நம் உயிராகவும் - உதிரமாகவும் திகழ்கின்ற தி.மு.கழகத்திற்கே உரியது.

இந்திய அளவில் தவிர்க்க முடியாத இயக்கமாக திகழ்கிறது தி.மு.க. எனும் பேரியக்கம்,இந்த வரலாற்றுப் பெருமையில் கழக உடன்பிறப்புகள் ஒவ்வொருவரின் பங்கு அளப்பரியது.

75 ஆண்டுகளை கடந்து பவள விழாவை நிறைவு செய்துள்ள தி.மு.க.ழகம் என்ற பேரியக்கம் வெற்றி - தோல்விகளை கடந்து, தனது இலட்சியப் பாதையில் உறுதி குலையாமல் பயணித்து வரும் தி.மு.கவுக்கு எத்தனை நெருக்கடிகள் வந்தாலும் அதனை எதிர்கொண்டு, முதுகு வலையாமல், தரையில் தவழாமல், நெஞ்சை நிமிர்த்தி நின்று, "நான் தி.மு. காரன், நான் கலைஞரின் உடன்பிறப்பு, தளபதியின் அன்புத் தொண்டன்" என்று கம்பீரமாகச் சொல்கின்ற துணிவும் வலிவுமே கழகத் தொண்டர்களின் அடையாளம்.

அந்த கம்பீரத்துடன், பேரறிஞர் அண்ணா கண்ட திராவிட முன்னேற்றக் கழகம், தனது 75-வது ஆண்டினை பவள விழாவாக கொண்டாடி மகிழ்ந்தது.

கழகத்தை தோற்றுவித்த பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் - 15 அன்று காலை கழகத்தின் அணைத்து கிளைகளிலும் உள்ள கழக கொடிக்கம்பங்களை புதுப்பித்து கழகத்தின் இலட்சிய இருவண்ணக் கொடியை கம்பீரமாக ஏற்றிட வேண்டும் என்றும்,

அத்துடன் கழகத் தொண்டர்களால் தான் இந்த பேரியக்கம் 75 ஆண்டுகளை கடந்து கம்பீரமாக பீடுநடை போட்டு வருகிறது என்பதை நாட்டு மக்களுக்கு எடுத்துக் காட்டிடும் வகையில், செப்டம்பர்-15 அண்ணா பிறந்த நாள் அன்று காலை9.00மணிக்கெல்லாம் அனைத்து கிளைகளிலும்கழக முன்னோடிகளை வைத்து, கழக கொடியை ஏற்றிட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கொடியேற்றும்நிகழ்ச்சிக்குபின்னர், கழகத்தினர்அவரவர் வாக்குச்சாவடிக்குச் சென்று, அந்தந்த வாக்குச் சாவடிகளில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்தை அலங்கரித்து வைத்து - மலர்தூவி அஞ்சலி செலுத்தி, அதன் பின்னர் BLA-2, BDA, BLC ஆகியோர் பங்கேற்கும் வாக்குச்சாவடி கூட்டங்களை நடத்தி, "ஓரணியில்தமிழ்நாடு" திட்டத்தின் கீழ் கழகத்தில் உறுப்பினர்களாக இணைந்த குடும்பங்களை அழைத்து, அவர்களையும் பங்கு பெற செய்து. அக்கூட்டங்களில் அனைவரும் இணைந்து உறுதிமொழி எடுத்து கொள்ள வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

---

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்

## மாநிலச் செயலாளராகத் தேர்வாகியுள்ள மு.வீரபாண்டியனுக்கு வாழ்த்து!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் தெரிவித்தார்!

சென்னை, செப். 14 -

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதள பதிவு வருமாறு:-

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டுள்ள மு.வீரபாண்டியன் அவர்களுக்கு வாழ்த்துகள்!**

**இயக்கத்தை இதுநாள் வரையில் சிறப்பாக வழிநடத்தி, தோழமை பாராட்டிய தோழர் முத்தரசன் அவர்களுக்கு நன்றி!**

**ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காகப் பாடுபடும் இடதுசாரி அரசியலில் இணைந்து பயணித்து, வெற்றி காண்போம்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட 157வது வட்டம், மணப்பாக்கத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு, உடனடி தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் அரசின் நலத்திட்ட உதவிகளை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். அருகில் மண்டலக்குழுத் தலைவர் என்.சந்திரன், ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் ப.குணாளன், வட்டச் செயலாளர்கள் ரவி, நடராஜன், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

---

எஸ்,ஆர்.ராஜா - பரிதி இளம்சுருதி - எஸ்,சேகர் - டி,காமராஜ் பங்கேற்பு!

## பெருங்களத்தூர் 60, 61 வட்டங்களில் செயல் வீரர்கள் கூட்டம்!

### ஆர்,மஞ்சுநாதன் – ஆர்,சஞ்சீவி ஏற்பாட்டில்!

தாம்பரம், செப்.14–

தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் தெற்கு பகுதிக்கு உட்பட்ட 60, 61வது வட்டங்களில் இன்று (14.9.2025 ஞாயிற்றுக்கிழமை) கழக செயல் வீரர்கள் கூட்டம் முதல் நிகழ்சியாக 61,து வட்டத்தில் காலை 9.30 மணி அளவில், பீர்க்கங்கரணை எம்ஜிஆர் பள்ளி வளாகத்தில்,வட்டச் செயலாளர் ஆர்.மஞ்சுநாதன் ஏற்பாட்டில், வட்ட அவைத்தலைவர் கே.ரவி தலைமையில், வட்டக் கழக நிர்வாகிகள் கே.சாமுண்டீஸ்வரி, எ.முகமது ஷெரிப், கே.சிவகுமார், எ.திருநாவுக்கரசு, எஸ்.தனசேகர், எஸ்.மனோகரன், ஓ.சுகந்தி, பி.கோபிநாத் ஆகியோர்கள் முன்னிலையிலும் அதன் பின் 60வது வட்டத்தில்,மேற்கு தாம்பரம் கல்யாண் நகர் ஸ்ரீ ரமணா வித்தியாலயா பள்ளி வளாகத்தில், காலை 11 மணியளவில் வட்டக் கழகச் செயலாளர் ஆர்.சஞ்சீவி ஏற்பாட்டில் வட்ட அவைத் தலைவர் அ.வ.சிராஜுதீன் வட்டக் கழக நிர்வாகிகள் கே.சண்முகம் கே.செல்வி, த.சீனிவாசன், த.பட்டுராஜா, து.நேரு, பா.சுரேந்தர் பாபு ஆகியோர்கள் முன்னிலையிலும் மேற்சொன்ன இரண்டு வட்டங்களிலும், கழக செயல் வீரர்கள் கூட்டம் நடைபெற உள்ளது.

இந்த இரண்டு வட்டங்களிலும், தாம்பரம் மாநகரக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ, தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர், பரிதிஇளம்சுருதி எம்.சி, எஸ்.சேகர் எம்.சி, டி.காமராஜ் ஆகியோர்கள் கலந்து கொண்டு கழகத்தினுடைய நடப்பு கள ஆய்வுகளையும், எதிர்வரும் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் வியூகங்கள் குறித்தும், கருத்துகளையும் ஆலோசனைகளையும் வழங்க உள்ளனர். இந்த செயல் வீரர்கள் கூட்டத் திற்கு, மாவட்ட, மாநகர, பகுதி, வட்ட, நிர்வாகிகள் இளைஞர் அணி உள்ளிட்டு அனைத்து அணிகளின், நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு கூட்டத் தினை சிறப்பித்திடுமாறு, வட்ட கழக செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

---

விழுப்புரம் மத்திய மாவட்ட

## பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்

### தலைமைக் கழக அறிவிப்பு!

கடந்த 13.2.2025 அன்று கழக நிர்வாக வசதிக்காகவும் கழகப் பணிகள் செம்மையுற நடைபெற்றிடவும் விழுப்புரம் மத்திய மாவட்டக் கழகப் பொறுப்பாளராக டாக்டர் இலட்சுமணன், எம்.எல்.ஏ., அவர்கள் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மாவட்டப் பணிகள் செவ்வனே நடைபெற, பின்வரும் மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள். :

பொறுப்புக்குழு உறுப்பினர்கள்: 1. இரா. ஜனகராஜ்,32, அமைச்சார் கோயில் தெரு, விழுப்புரம், 2. தயா. இளந்திரையன், 68, நாயக்கன் தோப்பு, விழுப்புரம். 3.வழக்கறிஞர் இரா. கண்ணப்பன், பி.ஏ.,பி.எல்., 4,தோட்டக்காரத் தெரு, குமாரக்குப்பம், வளவனூர், விழுப்புரம் மாவட்டம். 4. ஏ.மாரிமுத்து, முன்னாள் எம்.எல்.ஏ., 2/10, மாரியம்மன் கோவில் தெரு,புளிச்சம்பள்ளம் அஞ்சல், வானூர் தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம். 5. திருமதி கே. பிரேமா, 1/5, பள்ளிக்கூடத் தெரு, புதுக்குப்பம், உப்புவேலூர் அஞ்சல், வானூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை 600 018
நாள் : 13.09.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

## தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை துணைத் தலைவர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

தி.மு.க. கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைத் தலைவர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் அவர்கள் கல்வியாளர் அணிச் செயலாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால், அவருக்குப் பதிலாக திரு.**போஸ் வெங்கட்**, (10-பி, கான்சப்ட்ஸ், ரத்னா நகர், விருகம்பாக்கம், சென்னை-600092) அவர்கள் தி.மு.க. கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணைத் தலைவராக தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 600 018
நாள் : 13.09.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---




சோழமண்டல கழக காவலர் கலைஞரின் கண்மணி மறைந்த முன்னாள் அமைச்சர் கோ.சி.மணி அவர்களின் 97–வது பிறந்தநாளை முன்னிட்டு ஆடுதுறையில் உள்ள இல்லத்தில் அவரது சிலைக்கு உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம், முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம், மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர ஒன்றிய பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மற்றும் கழக நிர்வாகிகள் அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மயிலை ந.பூ.இராமஜெயம்

### செப்டம்பர் 14 (2007)



இளமைக்காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

வட்ட மற்றும் பகுதி அவைத் தலைவராகவும் பின்னர், பகுதிக் கழகச் செயலாளராகவும், தென்சென்னை மாவட்ட அவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

1996ஆம் ஆண்டு மயிலை தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இந்து நாளிதழ் தொழிற்சங்கத்தில் தொடர்ந்து 35 ஆண்டுகள் பொதுச்செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.

"நான் மதிக்கின்ற, போற்றுகின்ற, புகழ்கின்ற, பாராட்டுகின்ற, என்நெஞ்சில் வைத்து நினைத்து மகிழ்கின்ற ஒரு தொண்டன் ராமஜெயம்" என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**